தினமணி

# கோழிப் பண்ணை அமைக்க ரூ.39.78 லட்சம் கடன் வழங்கப்படும்: ஆட்சியர்

First Published : 31 Aug 2012 09:19:57 AM IST

திண்டுக்கல், ஆக. 30: திண்டுக்கல் மாவட்டத்தில் 34 கோழிப் பண்ணைகள் அமைக்க விவசாயிகளுக்கு ரூ.39.78 லட்சம் வங்கிக்கடனாக வழங்கப்படும் என மாவட்ட ஆட்சியர் ந.வெங்கடாசலம் தெரிவித்தார்.

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மாதாந்திர வங்கியாளர் கூட்டத்தில் ஆட்சியர் பேசியதாவது:

திண்டுக்கல் மாவட்டத்தில் 34 விவசாயிகளுக்கு கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் தலா ரூ.1.7 லட்சம் மதிப்பில் கோழிப் பண்ணை அமைக்க ரூ.39.78 லட்சம் கடன் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. இந்தக் கடனில் 25 சதவிகிதம் மானியமாக வழங்கப்படும். தாட்கோ மூலம் தனிநபர் கடனாக ரூ.1.5 லட்சம் கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. தனிநபர் கடனில் பெட்டிக்கடை, ஜவுளிக்கடை, பலசரக்கு கடை, பால் மாடு வளர்ப்பு போன்ற தொழில் செய்வதற்கு கடன்கள் வழங்கப்படமாட்டாது.

மாநிலத்தில் திண்டுக்கல் மாவட்டம் கடன் அதிகம் பெறும் மாவட்டமாக உள்ளது. 2012 ஜூன் மாதம் வரை ரூ.6,223 கோடி பல்வேறு தொழில்கள் செய்ய வங்கிகள் கடன்களைக் கொடுத்துள்ளது. ரூ.4,904 கோடி வைப்புத் தொகையை பொது மக்களிடமிருந்து பெற்றுள்ளது. வேளாண்மைக்காக கொடுக்கப்பட்ட கடனில் ரூ.2,617 கோடி நிலுவையில் உள்ளது. தாழ்த்தப்பட்ட பழங்குடியின மக்களுக்கு ரூ.660 கோடி பல்வேறு முதலீடுகளுக்கு கடன்கள் வழங்கப்பட்டு நிலுவையில் உள்ளது. மாவட்டத்தில் ரூ.381 கோடி கல்விக்கடன் வழங்கி நிலுவையில் உள்ளது.

ரிசர்வ் வங்கியின் கடன் வைப்பு நிதி குறியீடான 60 சதவிகிதத்திற்கு எதிராக மாவட்டத்தில் 127.79 சதவிகிதமாக வழங்கப்பட்டுள்ளது. அதேபோல வேளாண்மை கடன் வழங்குவதில் 18 சதவிகிதம் குறியீட்டிற்கு எதிராக 47.72 சதவிகிதம் கடன் வழங்கப்பட்டுள்ளது. நலிவடைந்த பிரிவினருக்கான குறியீடு 10 சதவிகிதத்திற்கு எதிராக 24.37 சதவிகிதமாக கடன் வழங்கப்பட்டுள்ளது. முன்னுரிமை கடன்கள் வழங்குவதில் 40 சதவிகிதம் குறியீட்டிற்கு எதிராக 69.26 சதவிகிதமாக கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் வங்கிகள் குறியீட்டை மிஞ்சி பொதுமக்களுக்கு கடன்கள் வழங்கி வருவது பாராட்டுக்குரியது.

நபார்டு வங்கி மூலம் ரூ.50 கோடி மதிப்பில் கிராமிய கட்டுமான திட்டத்தின் கீழ் கிராமசாலைகள் அமைப்பதற்கும், அரசு பள்ளிக் கட்டடங்கள் சுற்றுச்சுவர் கட்டுவதற்கும் நிதி வழங்கப்பட்டுள்ளது. நீர்வடிகால் பகுதியை மேம்படுத்துவதற்காக அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மூலம் ரூ.2.5 கோடி இம்மாவட்டத்தில் செலவு செய்யப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது. அரசின் பல்வேறு திட்டங்களை வங்கியாளர்கள் செயல்படுத்தி வருகின்றனர். திட்டங்களை சிறப்பாக செயல்படுத்த வங்கியாளர்கள் தொடர்ந்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார் ஆட்சியர்.

## கிராமப்புற வேளாண் பணி அனுபவ திட்ட பேரணி

First Published : 31 Aug 2012 09:32:06 AM IST

சிங்கம்புணரி, ஆக. 30: மதுரை வேளாண் கல்லூரி சார்பில், சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி அருகே உள்ள அ.காளாப்பூர் எஸ்.வி. மங்கலம் அரசு ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில், கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டப் பேரணி புதன்கிழமை நடைபெற்றது.

இந்த பேரணிக்கு, பள்ளித் தலைமையாசிரியர் மணிவண்ணன் தலைமை வகித்தார். மதுரை வேளாண்மைக் கல்லூரி 4-ம் ஆண்டு மாணவிகள் மற்றும் பள்ளி மாணவர்கள் இணைந்து நடத்திய இப்பேரணியில், இயற்கை உரங்களை ஆதரித்தும், மகசூலை பெருக்குவது பற்றியும், செயற்கை உரங்களின் பயன்பாட்டைத் தவிர்த்து வளத்தை காப்பது பற்றியும் மாணவர்கள் கோஷமிட்டவாறு சென்றனர். இதில், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். இதைத் தொடர்ந்து, பள்ளியில் மதியம் திருப்பத்தூர் ஆறுமுகம்பிள்ளை சீதையம்மாள் கலைக் கல்லூரி விலங்கியல் துறை சார்பில், பேச்சுப் போட்டி மற்றும் விநாடி-வினா நடத்தப்பட்டது. போட்டிக்கு, விலங்கியல் துறைப் பேராசிரியர் கோபிநாத் தலைமை வகித்தார். எஸ்.வி.மங்கலம் ஊராட்சி மன்றத் தலைவர் காந்திதாஸ் முன்னிலை வகித்தார். இதில், 2020-ல் வேளாண்மை என்ற தலைப்பில் பேச்சுப் போட்டியும், ரசாயன உரங்களின் பயன்பாடு வளர்ச்சியை நோக்கியா, வீழ்ச்சியை நோக்கியா என்ற தலைப்பில் பட்டிமன்றமும் மற்றும் விநாடி-வினாவும் நடத்தப்பட்டன. போட்டியில், வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. பள்ளி உதவித் தலைமையாசிரியர் முருகன் நன்றி கூறினார்.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மேலும் அதிகரிப்பு

First Published : 30 Aug 2012 02:19:28 PM IST

மேட்டூர், ஆக. 29: மேட்டூர் அணைக்கு நீர் வரத்து மேலும் அதிகரித்துள்ளது.

காவிரியின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த இரண்டு மூன்று தினங்களாகப் பரவலாக மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர் வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

கடந்த 26-ம் தேதி நீர் வரத்து 1,192 கன அடியாக இருந்தது. இது 27-ம் தேதி மாலை 1,549 கன அடியாக உயர்ந்து, புதன்கிழமை மாலை 3,518 கன அடியாக அதிகரித்துள்ளது. நீர் வரத்தைவிட குடிநீர் தேவைக்கு திறக்கப்படும் நீரின் அளவு குறைவாக இருப்பதால் மேட்டூர் அணையின் நீர் மட்டம் மெல்ல உயரத் தொடங்கியுள்ளது.

நீர் வரத்து அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். புதன்கிழமை மாலை மேட்டூர் அணையின் நீர் மட்டம் 76.42 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 3,518 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. குடிநீர் தேவைக்கு விநாடிக்கு 2,002 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டிருந்தது. நீர் இருப்பு 38.48 டி.எம்.சி.யாக இருந்தது.

## காவிரி நதிநீர் ஆணையத்தைக் கூட்டத் தயார்

First Published : 31 Aug 2012 12:52:53 AM IST

புது தில்லி, ஆக. 30: காவிரி நதி நீர் ஆணையத்தைக் கூட்டத் தயாராக இருப்பதாக மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது. இந்த வழக்கு தொடர்பாக மத்திய அரசு தாக்கல் செய்த பதில் மனுவில் சம்பந்தப்பட்ட தமிழகம், கர்நாடகம், கேரளம், புதுச்சேரி ஆகிய மாநில முதல்வர்களுக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது என்றும் மத்திய அரசு குறிப்பிட்டுள்ளது.

காவிரி நதிநீர் ஆணையத்தைக் கூட்ட மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும் எனக் கோரி தமிழக அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

அந்த மனுவை விசாரித்த நீதிமன்றம், ""தமிழக அரசின் மனு தொடர்பாக மத்திய அரசும், கர்நாடக அரசும் 10 நாள்களில் பதில் அளிக்க வேண்டும்'' என்று உத்தரவிட்டிருந்தது. வழக்கை செப்டம்பர் 3-ம் தேதிக்கு ஒத்திவைத்தது.

இதையடுத்து, கர்நாடக அரசு கடந்த 24-ம் தேதி தாக்கல் செய்த பதில் மனுவில், ""வறட்சி நிலவுவதால் தமிழகத்துக்கு வாரந்தோறும், மாதந்தோறும் தண்ணீர் தர இயலாது'' என்று மறுத்துவிட்டது.இந்நிலையில், வியாழக்கிழமை மத்திய அரசு பதில் மனுவைத் தாக்கல் செய்துள்ளது. அதில், காவிரி நதிநீர் ஆணையத்தைக் கூட்டுவதற்குத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளது.

மத்திய அரசு தாக்கல் செய்துள்ள 2 பக்க மனு விவரம்:

இந்த ஆண்டு 85.9 டிஎம்சி நீரைத் தமிழகத்துக்குக் கர்நாடகம் இன்னும் வழங்கவில்லை. இந்தப் பிரச்னைக்குக் காவிரி நதி நீர் ஆணையத்தைக் கூட்டித்தான் தீர்வு காண முடியும்.

நதிநீர் ஆணைய கூட்டத்தில் பங்கேற்பது தொடர்பாக தமிழகம், கர்நாடகம், கேரளம், புதுச்சேரி ஆகிய மாநில அரசுகளுக்கும் மத்திய அரசு கடிதம் எழுதியுள்ளது. அவற்றின் பதிலுக்காக மத்திய அரசு காத்திருக்கிறது. பதில்கள் கிடைத்தவுடன் காவிரி நதி நீர் ஆணையத்தின் கூட்டம்

கூட்டப்படும். ஆணையத்தைக் கூட்ட மத்திய அரசு தயாராக உள்ளது" என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.
காவிரி நதிநீர் விவகாரம் குறித்த வழக்கு செப்டம்பர் 3-ம் தேதி உச்ச நீதிமன்றத்தில் விசாரணக்கு வருகிறது. இந்நிலையில், மத்திய அரசு இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## பருவமழை தாமதம் மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களில் இரண்டாம் போக நெல் சாகுபடி பாதிக்கப்படும் அபாயம்

First Published : 31 Aug 2012 09:30:48 AM IST

ஆண்டிபட்டி,ஆக. 31: தேனி மாவட்டத்தில் பருவமழை தாமதமாகி வருவதால், வைகை அணையின் நீர் மட்டம் குறைந்து வருகிறது. இதனால் மதுரை மற்றும் திண்டுக்கல் மாவட்ட இரண்டாம் போக நெல் சாகுபடி பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.
பெரியாறு பாசனப்பகுதியில் திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்ட பகுதியில் சுமார் 1,26,000 க்கு மேற்பட்ட ஏக்கர் பகுதிகளில் வைகை அணையின் மூலம் இருபோக சாகுபடி செய்யப்படுகிறது. இப்பாசன பகுதிகளுக்கு முதல் போக சாகுபடிக்காக ஜூன் மாதத்திலும், இரண்டாம் போக சாகுபடிக்கு செப்டம்பர் மாதத்திலும் தண்ணீர் திறந்து விடப்படுவது வழக்கம்.
முதல் போக சாகுபடி பாதிப்பு: கடந்த ஆண்டு 14.06.11 அன்று அணையிலிருந்து முதல் போக பாசனத்திற்கு 900 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது. அப்போது அணையின் நீர் மட்டம் 49.84 அடி. ஆனால் கடந்த 14.06.12 அன்று அணையின் நீர் மட்டம் குறைவாக இருந்ததால் அணையில் இருந்து நீர் திறப்பு நிறுத்தி வைக்கப்பட்டது. இதனால் முதல் போக சாகுபடி விவசாயம் பாதிப்படைந்துள்ளது.
இரண்டாம் போக சாகுபடி பாதிக்கப்படும் அபாயம்: ஆக. 27 நிலவரப்படி பெரியாறு அணையின் நீர் மட்டம் 117 அடியும், கொள்ளவு 2087 மில்லியன் கன அடியும், வைகை அணையின் நீர் மட்டம் 35.11 அடியும், கொள்ளவு 612 மில்லியன் கன அடி தண்ணீர் இருக்கிறது.
கடந்த ஆண்டு 2011- ஆக. 27 நிலவரப்படி பெரியாறு அணையின் நீர் மட்டம் 121.4 அடியும், கொள்ளவு 2905, வைகை அணையின் நீர் மட்டம் 51.84 அடியும், கொள்ளளவு 2241 மில்லியன் கன அடி தண்ணீரும் இருந்தது. மேலும் முதல் போக சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது.
தற்போது முதல் போக சாகுபடி செய்யமுடியாத நிலையில், இரண்டாம் போக சாகுபடிக்கு திண்டுக்கல், மதுரை மற்ற மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 1,26,000-க்கு மேற்பட்ட விவசாய நிலங்கள் வைகை அணையை நம்பி உள்ளது.
வைகை அணையில் 6500 மில்லியன் கன அடி கொள்ளளவு இருக்கும் பட்சத்தில் நீர் திறந்து விடுவது வழக்கம். பருவமழை தாமதமாகி வருவதால், இதே நிலை நீடித்தால் இரண்டாம் போக சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடுவது சந்தேகமே

குடி நீர் பாதிக்கப்படும் அபாயம்: வைகை அணையில் தற்போது 35.11 அடி நீர் இருப்பு உள்ளது. இதில் அணை தூர் வாரப்படாததால் சுமார் 20 அடிக்கு மேல் சேறு தேங்கியுள்ளது. இதில் 10 அடி நீர் மட்டுமே குடிநீருக்கு உபயோகப்படுத்தும் நிலையில் உள்ளது. இந்த நீரை 40 நாள்களுக்கு மட்டுமே உபயோகப்படுத்த முடியும். இதே நிலை நீடித்தால் மதுரை மற்றும் ஆண்டிபட்டி-சேடபட்டி கூட்டு குடிநீரும் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

உரங்களின் விலை: கேள்வி கேட்ட இளைஞருக்கு மம்தா பதில்

First Published : 30 Aug 2012 12:30:46 AM IST



கிருஷ்ணாகர், ஆக. 29: பொதுக்கூட்டத்தில் பங்கேற்ற மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜியிடம், உரங்களின் விலை உயர்வு குறித்து ஓர் இளைஞர் கேள்வி எழுப்பினார். அதற்கு மம்தா பொறுமையாகப் பதிலளித்தார்.

மேற்கு வங்கத்தின் நாடியா மாவட்டம் கிருஷ்ணாகர் நகரில் திரிணமூல் காங்கிரஸ் கட்சி சார்பில் புதன்கிழமை பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கட்சித் தலைவரும், மாநில முதல்வருமான மம்தா பானர்ஜி பேசியதாவது:

இடதுசாரி அரசு கடந்த 34 ஆண்டுகளில் செய்ய முடியாததை ஒரே வருடத்தில் நாம் செய்துள்ளோம். மூன்று பல்கலைக்கழகங்களை நாம் ஒரே வருடத்தில் அமைத்துள்ளோம். ஆனால் அவர்கள் ஒரு பல்கலைக்கழகத்தை மட்டுமே அமைத்தனர். நாம் 90 சதவீதப் பணிகளை முடித்திருக்கிறோம். நம் மீது அவதூறுகளைப் பரப்புவதற்குப் பதிலாக அவர்கள் அமைதியாக ஓய்வெடுக்க வேண்டும்.

மேற்கு வங்கத்தில் அடுத்த மூன்று ஆண்டுகளில் 371 குளிர்பதனக் கிடங்குகளும், 371 விவசாயச் சந்தைகளும் ஏற்படுத்தப்படும். நாடியா மாவட்டத்தில் ரூ.16 கோடி செலவில் நவீன மருத்துவமனை அமைக்கப்பட உள்ளது. இங்குள்ள உள்ளூர் மருத்துவமனைகள் மேம்படுத்தப்படும் என்று மம்தா பேசினார்.

அவர் பேசி முடித்தபோது, கூட்டத்தில் இருந்த இளைஞர் ஒருவர் ""உரம்.... உரம்...." என்று கத்தினார். உரங்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதையே அவர் கேட்கிறார் என்பதைப் புரிந்து கொண்ட மம்தா, ""உரவிலை நிர்ணயம் என்பது மாநில அரசு சம்பந்தப்பட்டது அல்ல; அது மத்திய அரசு விவகாரம். எனவே இதில் நாம் பெரிதாக எதுவும் செய்துவிட முடியாது. ஆனால், நான் இந்த விவகாரத்தைப் பிரதமரிடம் கொண்டு சென்றுள்ளேன்" என்று பொறுமையுடன் பதிலளித்தார் மம்தா.

தினமலர்
உண்மையின் உரைகல்

ஆகஸ்ட் 31,2012,00:11

**"தினமலர்' செய்தி எதிரொலி வெளிநாட்டில் பட்டு உற்பத்தி செய்து பெறும் திட்டத்திற்கு எதிர்ப்பு**



வெளிநாடுகளிலிருந்து பட்டு வகைகளை உற்பத்தி செய்து பெறும் மத்திய அரசின் திட்டத்திற்கு, பட்டு விவசாயிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். உடனடியாக இத்திட்டத்தை கைவிட வேண்டும் என, உடுமலை பகுதி விவசாயிகள், மத்திய ஜவுளி துறை அமைச்சகத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

**போர்க்கொடி:**கஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான், தஜிகிஸ்தான் நாடுகளில் இருந்து கச்சா பட்டு வகைகளையும், கென்யா, உகாண்டா உள்ளிட்ட ஆப்ரிக்க நாடுகளில் இருந்து பருத்தி வகைகளையும் உற்பத்தி செய்து பெற மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இது பற்றிய செய்தியை முதன் முதலாக "தினமலர்' வெளியிட்டது.

இதையடுத்து, பல விவசாய அமைப்புகள் மத்திய அரசின் திட்டத்திற்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ளன. மத்திய அரசின் நடவடிக்கை, தங்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கும் என, பட்டு உற்பத்தி தொழிலில் ஈடுபட்டு வரும் பல ஆயிரம் விவசாயிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

**கச்சாப்பட்டு:**இந்தியாவில், ஆண்டுதோறும் 18 ஆயிரம் டன் கச்சாப்பட்டு உற்பத்தியாகிறது. பட்டுத் துணிகள் உற்பத்திக்கு பற்றாக்குறையாக இருக்கும் 12 ஆயிரம் டன் கச்சா பட்டு, சீனா உட்பட பல்வேறு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது.உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க மத்திய அரசு கடந்த 1997ம் ஆண்டு மத்திய ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையங்களை பல்வேறு மாநிலங்களில் துவங்கி பட்டுக்கூடு உற்பத்திக்கான கட்டமைப்புகளை மேம்படுத்தியது. இதனால், கர்நாடகா, தமிழ்நாடு, மேற்கு வங்கம் உட்பட மாநிலங்களில் தொழில் நுட்பங்கள்

மிகுந்த இத்தொழிலில், விவசாயிகள் தயக்கத்துடன் ஈடுபடத் துவங்கினர். படிப்படியாக உள்நாட்டு உற்பத்தியும் அதிகரித்தது.

**உற்பத்தி உயர்வுக்கு தடை போட்ட மத்திய அரசு:** இந்நிலையில், கடந்த 2010ம் ஆண்டு, சீனாவிலிருந்து கச்சா பட்டு இறக்குமதிக்கான விதிமுறைகளை மத்திய அரசு தளர்த்தியது. பதுக்கல் சந்தைக்கு ஊக்கம் அளிக்கும் இத்திட்டத்திற்கு விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்தனர்.மத்திய அரசு கண்டுகொள்ளாத நிலையில், வெண்பட்டுக்கூடுகள் விலை கிலோ 400 ரூபாயிலிருந்து 200 ரூபாயாக சரிந்தது.
தவறான இறக்குமதி கொள்கையால், உள்நாட்டு உற்பத்தி பாதிக்கப்பட்டது. மத்திய அரசு தற்போது கஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான், தஜிகிஸ்தான் ஆகிய நாடுகளில் முதலீடு செய்து பட்டு உற்பத்தி செய்து பெற திட்டமிட்டுள்ளது.

**பட்டு வளர்ப்பு:**இதனால், உள்நாட்டில் பட்டுக்கூடுகளின் விலை சரிந்து, இத்தொழில் காணாமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளது. தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களில் விவசாயம் சார்ந்த பட்டு வளர்ப்பு, ரீலிங் ஆகிய தொழில்களில், அதிக எண்ணிக்கையில், இளைஞர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.
உள்நாட்டில் பட்டு வளர்ப்பு தொழிலில் கட்டமைப்புகளை மேம்படுத்த மத்திய அரசு உதவினால், வெளிநாடுகளில் முதலீடு மற்றும் இறக்குமதி செய்வதற்கான தேவை இருக்காது என, இத்தொழிலில் ஈடுபடும் இளைஞர்கள் தெரிவித்துள்ளனர்.

**பீதியில் விவசாயிகள்:**பட்டு வளர்ப்பு தொழிலில், ஈடுபட்டு வரும் பல விவசாயிகள் மல்பெரி செடி வளர்ப்பு போன்ற பணிகளுக்காக பல லட்ச ரூபாய் முதலீடு செய்துள்ளனர். வெளிநாடுகளில் உற்பத்தி செய்து பட்டு பெறப்பட்டால் உள்நாட்டு உற்பத்திக்கு, முற்றிலுமாக விலை கிடைக்காது.

உர விலை உயர்வு போன்ற பல்வேறு காரணங்களால் உற்பத்தி செலவு அதிகரித்துள்ள நிலையில், பட்டுக்கூடுகளின் விலை சரிவடைந்தால், அதிக இழப்பு ஏற்படும். வெளி நாடுகளில் முதலீடு செய்யும் தொகையை, உள்நாட்டு கட்டமைப்பு வசதியை மேம்படுத்த பயன்படுத்தினால், தேவையான பட்டு உற்பத்தியை பெற முடியும் என, பட்டு விவசாயிகள் தெரிவித்தனர்.**- நமது நிருபர் -**

ஆகஸ்ட் 31,2012,00:12

**விலையை கட்டுப்படுத்த... வெளிச்சந்தைக்கு மேலும் 30 லட்சம் டன் கோதுமை**



புதுடில்லி:வெளிச் சந்தையில், மேலும் 30 லட்சம் டன் கோதுமையை விற்பனை செய்ய, பொருளாதார விவகாரங்களுக்கான முக்கிய அமைச்சர்கள் குழுவிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது என, மத்திய உணவு அமைச்சர் கே.வி.தாமஸ் தெரிவித்தார்.

மாவு ஆலைகளின் தேவையை பூர்த்தி செய்யவும், விலை உயர்வை கட்டுப்படுத்தவும், அதிகளவில் உள்ள கோதுமையின் கையிருப்பை குறைக்கவும், இத்தகைய நடவடிக்கை உதவும் என, அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

வெளிச் சந்தை விற்பனை திட்டத்தின் கீழ், இந்திய உணவு கழகம், ஏல முறையில், ஒரு குவிண்டால் கோதுமையை 1,170 ரூபாய் என்ற அடிப்படை விலையில் விற்பனை செய்து வந்தது. இது, நடப்பு மாதத்தில், 1,285 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

அதேசமயம், கடந்த ஒரு மாதத்தில், டில்லி மொத்த விலை அங்காடிகளில், ஒரு குவிண்டால் கோதுமை விலை 22 சதவீதம் உயர்ந்து, 1,625 ரூபாயாக அதிகரித்துள்ளது. பருவமழை குறைவால், ரபி பருவத்தில் இதன் உற்பத்தி குறையும் என்ற மதிப்பீடும், வெளிச் சந்தையில் இதன் வரத்து குறைந்ததுமே இதற்கு முக்கிய காரணம்.கடந்த சில ஆண்டுகளாக உணவு தானிய உற்பத்தி சிறப்பான அளவில் அதிகரித்து வருவதையடுத்து, ஆகஸ்ட் 1ம் தேதி வரையிலான காலத்தில், மத்திய அரசின் உணவு தானிய கையிருப்பு மிக அதிகளவாக, 7.61 கோடி டன் என்ற அளவில் உள்ளது.

இதில், கோதுமையின் பங்களிப்பு 4.75 கோடி டன் என்ற அளவில் உள்ளது. எனினும், நம்நாட்டில், 7.14 கோடி டன் தானியங்களை சேமித்து வைக்கும் அளவிற்கே கிடங்கு வசதிகள் உள்ளன. பருவமழை காலத்தில், சேமிப்பு கிடங்குகளில் உள்ள கோதுமை வீணாவதை தடுக்கும் நோக்கில், சென்ற ஜூன் மாதத்தில், வெளிச் சந்தையில் 30 லட்சம் டன் கோதுமையை விற்பனை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

## விவசாயிகள் குறைதீர் கூட்டத்தை புறக்கணிக்கும் உயரதிகாரிகள்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 31,2012,07:22 IST

கருத்தை பதிவு செய்ய

கரூர்: கரூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்த விவசாயிகள் குறைதீர் கூட்டத்துக்கு வராமல் சில உயர் அதிகாரிகள் புறக்கணித்தனர். கூட்டத்துக்கு வந்த ஊழியர்களும், விவசாயிகளின் கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் திணறினர்.

கரூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் ÷ஷாபனா தலைமையில் நேற்று காலை 11.15 மணிக்கு தொடங்கியது. முதலில் கடந்த மாததத்தில் நிலுவையில் உள்ள மனுக்கள் மீது பெறப்பட்ட பதில்கள், விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. அப்போது அந்த பதில்கள் மீது, பல்வேறு சந்தேகங்களை விவசாயிகள் எழுப்பினர்.குறிப்பாக, மேட்டு மருதூரை சேர்ந்த விவசாயி வீரமலை பேசுகையில், ""விவசாயிகள் குடும்பத்தில் உள்ள படித்த மாணவர்கள், மாணவிகள், வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து பல ஆண்டுகள் ஆகிறது. வேலை கிடைப்பது அடுத்த விஷயம். ஆனால் நேர்முகத்தேர்வுக்கு அழைப்பு கூட வருவதில்லை," என்றார்.அப்போது, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலரை பதில் சொல்ல, கலெக்டர் ÷ஷாபனா அழைத்தார். ஆனால் அவர் கூட்டத்துக்கு வரவில்லை. ஊழியர் மட்டுமே வந்திருந்தார். இதனால், வேலைவாய்ப்பு அலுவலக அதிகாரியை, உடனடியாக விவசாயிகள் குறைதீர் கூட்டத்துக்கு வரச்சொல்லி கலெக்டர் ÷ஷாபனா உத்தரவிட்டார்.

அதையடுத்து, "சத்தியமங்கலத்தில் இதய நோய் சம்பந்தமாக நடந்த மருத்துவ முகாமில் எத்தனை பேர் பங்கேற்று பரிசோதனை செய்து கொண்டனர்' என குளித்தலையை சேர்ந்த கோபாலா தேசிகன் கேள்வி எழுப்பினார். அதற்கு பதில் அளிக்க டி.ஆர்.ஓ., கிறிஸ்துராஜ், சுகாதாரத்துறை அதிகாரியை அழைத்தார். ஆனால், அவர் வரவில்லை. சுகாதாரத்துறையை சேர்ந்த அலுவலக ஊழியர் தான் வந்திருந்தார். அவரும், ""தன்னிடம் எந்த புள்ளி விபரமும் இல்லை. அதிகாரியிடம் கேட்டு சொல்கிறேன்," என்றார்.அதேபோல், பல்வேறு துறையை சேர்ந்த அதிகாரிகள் கூட்டத்துக்கு வராமல், ஊழியர்களை அனுப்பி இருந்தனர். ஒரு சில கேள்விகளுக்கு வேறு துறையை சேர்ந்த அதிகாரிகள் விளக்கம் அளித்தது வேடிக்கையாக இருந்தது.""குறைதீர் கூட்டத்துக்கு முடிவு எடுக்கக்கூடிய நிலையில் உள்ள பல்வேறு துறையை சேர்ந்த உயர் அதிகாரிகள் வராமல் புறக்கணிக்கின்றனர். சம்பந்தப்பட்ட துறையை சேர்ந்த ஊழியர்கள் எந்த புள்ளி விபரங்களும் இல்லாமல் வெறுங்கையோடு வருவதால், விவசாயிகளின் குறைகள் மற்றும் கேள்விகளுக்கு முறையான பதில் கிடைப்பதில்லை.

""கலெக்டர் டி.ஆர்.ஓ., கிறிஸ்துராஜ் ஆகியோர் வேகமாக செயல்பட்டாலும், சில அதிகாரிகளின் புறக்கணிப்பால் மாதந்தோறும் நடக்கும் விவ சாயிகள் குறைதீர் கூட்டம் வெறும் சடங்காகவே நடந்து முடிகிறது," என, சில விவசாயிகள் அதிருப்தி தெரிவித்தனர்.கலெக்டருக்கு பாராட்டு

மழை!கரூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டத்தை சில அதிகாரிகள் புறக்கணித்த நிலையிலும், கலெக்டர் ÷ஷாபனாவை, சில விவசாயிகள் ஏகத்துக்கும் புகழ்ந்து தள்ளினர். ஒரு கட்டத்தில் பேசிய விவசாயி ஒருவர், "நாங்கள் கோவிலுக்கு போவதில்லை. இதைதான் (கலெக்டர் அலுவலகம்) கோயிலாக நினைத்து வருகிறோம். குறைகளை தீர்க்கும் கலெக்டர் ÷ஷாபனாவுக்கு நன்றி என்றார்.மற்றொரு விவசாயி, ""கலெக்டர் ÷ஷாபனாவை பாராட்ட எனக்கு வயதில்லை. வணங்குகிறேன்,'' என்றார். மேலும், சில விவசாயிகள் அடிக்கடி கையை வேகமாக தட்டி, குட்டி கதைகள் சொல்லி கலெக்டர் ÷ஷாபனாவை பாராட்டுவதிலேயே குறியாக இருந்தனர்.

**விவசாயிகளின் குழந்தைக்கு கல்விக்கடனில் முன்னுரிமை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 31,2012,07:05 IST

கருத்தை பதிவு செய்ய

தஞ்சாவூர்: "டெல்டா மாவட்டங்களில் தண்ணீரின்றி விவசாயம் பாதித்ததால் நஷ்டம் ஏற்பட்ட விவசாயிகளின் குழந்தைகளுக்கு கல்விக்கடன் வழங்குவதில் முன்னுரிமை அளிக்க வேண்டும்' என, தஞ்சை மாவட்ட கிராமப்புற நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம் சார்பில், அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தஞ்சை மாவட்ட கிராமப்புற நுகர்வோர் பாதுகாப்பு இயக்க தலைவர் விமலநாதன், துணைத்தலைவர் மகேஸ்வரி ஆகியோர் தமிழக அரசுக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியிருப்பதாவது:தென்தமிழக மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, மாநில அளவில் நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் கிளையை மதுரையில் துவக்க தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.தமிழகத்தில் தனியார் சுயநிதி மருத்துவ மற்றும் அரசு பொறியியல், கல்வியியல், பாராமெடிக்கல் தொழில்நுட்ப மற்றும் தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் நடப்பாண்டு வகுப்புகளை துவக்கிய நிலையில் கிராமப்புற ஏழை, எளிய விவசாய பெற்றோர் மத்திய அரசின் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் கல்விக்கடன் திட்டத்தின்கீழ் கடன் பெற்று குழந்தைகளை மேற்கல்வி படிக்க முயற்சி எடுத்து வருகின்றனர்.

நடப்பாண்டு முதல் 2015ம் ஆண்டு வரை கல்வி நிறுவனங்களின் கட்டணத்தை நீதிபதி பாலசுப்பிரமணியன் தலைமையில் கல்விக்கட்டண நிர்ணயக்குழு 25 சதவீதம் உயர்த்தி அனுமதித்துள்ளது. இந்நிலையில் ஏழை பெற்றோர் வங்கியில் கிடைக்கும் கல்விக்கடனை நம்பி அதிக வட்டிக்கு பணம் பெற்று, குழந்தைகளை கல்வி நிறுவனங்களில் சேர்த்து, அவதிப்படுகின்றனர்.ரிசர்வ் வங்கி வழிகாட்டுதல்படி, ஆறு லட்சம் ரூபாய் வரை எவ்வித பிணையமோ, உறுதிமொழி பத்திரமோ இல்லாமல் மாணவர்கள் இருப்பிடத்துக்கு அருகே அந்தந்த வங்கிகளில் கல்விக்கடன் வழங்கலாம் என, அறிவுறுத்தியுள்ளது. ஆனாலும்,

பெரும்பாலான வங்கிகளில் கல்விக்கடன் மறுக்கப்படுகிறது.
தற்போது, மேட்டூர் தண்ணீரின்றி டெல்டா மாவட்டங்களில் வறட்சி ஏற்பட்டு, தண்ணீரின்றி விவசாயம் பாதித்துள்ள நிலையில் விவசாய குடும்பத்திலுள்ள குழந்தைகளுக்கு கல்விக்கடனில் முன்னுரிமை அளிக்கவும், கல்விக்கடன் சிறப்பு முகாம்களை நடத்தவும் அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு, அதில் கூறியுள்ளனர்.

**வெள்ளைபூண்டு விவசாயிகள்வியாபாரிகள் கலந்தாய்வு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 31,2012,00:19 IST

கருத்தை பதிவு செய்ய

திண்டுக்கல்:வெள்ளைபூண்டு வார சந்தை சிறப்பாக செயல்பட, வியாபாரிகள், விவசாயிகள் கலந்தாய்வு கூட்டம், திண்டுக்கல்லில் உள்ள வேளாண்மை விற்பனைக்குழு தலைமை அலுவலகத்தில் நடந்தது.துணை இயக்குனர் (விற்பனை) சாரநாத்பாபு தலைமை வகித்தார். விற்பனைக்குழு செயலாளர் சையதுஇப்ராகிம் முன்னிலை வகித்தார். விவசாயிகள் சங்க தலைவர் ஆறுமுகம், வியாபாரிகள் சார்பில் திருப்பதி உட்பட பலர் கலந்துகொண்டனர். பூண்டின் தரத்தை அறிந்து அதற்கேற்ப விலை நிர்ணயிக்கவேண்டும், என, விவசாயிகள் கோரிக்கைவிடுத்தனர். இதை வியாபாரிகள் ஏற்றுக்கொண்டனர். வெள்ளைப்பூண்டை மொத்தமாக வாங்கி வெளியிடங்களுக்கு விற்பனைக்கு அனுப்பிய பிறகே பணம் பெறமுடியும் என்பதால், கடன் வழங்க வியாபாரிகள் கேட்டுக்கொண்டனர்.இதற்கு வங்கிகளின் உதவியை நாட அதிகாரிகள் கேட்டுக்கொண்டனர். புதன் தோறும் வத்தலக்குண்டில் நடைபெறும் வெள்ளைப்பூண்டு சந்தை, நல்லமுறையில் செயல்பட விவசாயிகள், வியாபாரிகள் ஒத்துழைக்க வலியுறுத்தப்பட்டது. விற்பனைக்குழு மேலாளர் முத்துக்கிருஷ்ணன் நன்றி கூறினார். ஏற்பாடுகளை விற்பனைக்குழு மேற்பார்வையாளர் பொன்ராம் செய்திருந்தார்.

**விவசாயிகள் மாற்றி யோசித்தால் விளைச்சல், உற்பத்தியில் முன்னேற்றம் காணலாம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 31,2012,02:54 IST

கருத்தை பதிவு செய்ய

உடன்குடி : விவசாயிகள் எப்போழுதும் ஒரே மாதிரி சிந்திக்காமல் கொஞ்சம் மாற்றி யோசித்தால் விளைச்சலிலும், உற்பத்தியிலும் சமூக பொருளாதார வளர்ச்சியிலும் மிகுந்த முன்னேற்றம் அடையலாம் என உடன்குடி அருகே நடந்த உழவர் மன்றங்களுக்கான பயிற்சி முகாமில் நபார்டு

பேங்க் மேலாளர் பேசினார். மெய்யூர் ஜெய்ஹிந்த் உழவர் மன்றம் வெங்கட்ராமனுஜபுரம் பாரத் உழவர் மன்றம் ஆகிய இரண்டு உழவர் மன்றங்களின் பயிற்சி முகாமில் நபார்டு பாங்க் மேலாளர் பேசினார்.

மெய்யூர் ஜெய்ஹிந்த் உழவர் மன்றம், வெங்கட்ராமானுஜபுரம் பாரத் உழவர் மன்றம் ஆகிய இரண்டு உழவர் மன்றங்களின் பயிற்சி முகாம் உடன்குடி அருகே மெய்ப்பூரில் நடந்தது. மெய்யூர் ஜெய்ஹிந்த் உழவர் மன்ற தலைவர் கோயில் பிச்சை தலைமை வகித்தார். துரைராஜன் முன்னிலை வகித்தார், ஐயப்பன் வரவேற்றார். முதலூர் வீட்ஸ் நிறுவன இயக்குநர் சார்லஸ் வாழ்த்துரை வழங்கினார். இதில் தூத்துக்குடி நபார்டு பேங் மேலாளர் நடராஜன் பேசியதாவது. சுமார் 15 வருடங்களுக்கு முன்பு மக்களுக்கு பேங் என்றால் என்னவென்றே தெரியாது. பெண்கள் பேங்கில் கடன் பெற்றால் 95 சதவீதம் திருப்பி செலுத்தி விடுகின்றனர், ஆண்களுக்கு பேங்கில் கடன் உதவி செய்தால் அவர்கள் எப்போழுது கடன் தள்ளுபடியாகும் என்று எதிர்பார்த்து கடனை கட்டுவதே இல்லை. இதனால் பேங்கில் கடன் பெறுவதற்கான தகுதியை இழந்து விடுகின்றனர். எனவே இப்படிப்பட்ட நபர்களை கடனை திருப்பி செலுத்துவதற்கான நடவடிக்கைகளை இம்மன்றத்தின் மூலம் செயல்படுத்துவதனால் பேங் மேலாளரிடம் உழவர் மன்றம் நல்ல பெயர் வாங்கி அவர்களுடைய கோரிக்கைகளை பரீசிலனை செய்ய பேங் உதவி செய்யும். பேங் மேலாளருக்கும் கிராம மக்களுக்கும் இடையே நல்ல விதமான நம்பிக்கையின் தொடர்பு இருக்க வேண்டும்.

அப்பொழுதுதான் இம்மன்றம் மூலம் இந்த கிராமமே வளர்ச்சி அடையும். கடனை திருப்பி செலுத்துவதற்கு தேவையற்ற சாக்கு போக்கு சொல்லக் கூடாது,சிலர் நிலத்தடி நீர் உப்பாக மாறிவிட்டது. நிலத்தடி நீர் இல்லை என்கிறார்கள், இதெல்லாம் தேவையற்ற காரணங்கள் நீர் மேலாண்மை என்பதையே மறந்து விடுகிறார்கள். ஆழ்குழாய் போடுவதாலேயே நிலத்தடி நீர் தட்டுப்பாடு ஏற்ப்படுகிறது. இன்னும் பிளாஸ்டிக் பொருட்களை நிலங்களில் போடுவதினாலும் நீர் வளம், மண் வளம் கெட்டு விடுகிறது. நாமே நம்முடைய பூமியை மாசுப்படுத்துகிறோம். பிளாஸ்டிக் கவர்களில் வாங்கி சாப்பிடுவதினால் அதில் உள்ள கெமிக்கல் நமது உடம்பில் சேர்ந்து பலவிதமான நோய்களை உண்டாக்கிறது. இப்படிப்பட்ட காரியங்களை நாம் தான் மக்களுக்கு புரியவைத்து நம்முடைய சந்ததி பாதிக்காத வண்ணம் காக்க வேண்டும்.

ஏற்கனவே நமது பகுதிகளில் நீர் சேமிப்பு திட்டம் ஒன்று அமைக்க வேண்டும். ஏற்கனவே நமது பகுதியில் நீர் சேமிப்பு திட்டம் அமைக்க முதலாவது நாம் கையாள வேண்டியது. நமது ஊரில் எத்தனை செ.மீ.மழை பெய்துள்ளது. ஊற்பத்தி திறன் 1 ஏக்கருக்கு அல்லது 1 ஹெக்டருக்கு உற்பத்தி திறன் எவ்வளவு இருக்கிறது. என்பது பற்றி கணக்கிட வேண்டும். பயிர் சரியாக விளையாதற்கு என்ன காரணம் என்று கண்டறிந்து அதற்கான முறைகளை கையாள வேண்டும். உதாரணம் இஸரேல் நாடு மிகச் சிறிய நாடு அங்கு மண் வளம் இல்லை.

தண்ணீரும் பற்றாக்குறை. ஆனாலும் அவர்கள் மிகச் சிறப்பாக விவசாயம் செய்கிறார்கள்.

தேங்காய் நாரில் உள்ள கயர் பித்து என்பதை பயன்படுத்தி அதில் விவசாயம் செய்கிறார்கள். இதனை தான் மாற்றி யோசி என்று சொல்கிறோம். எப்போழுதும் ஒரே மாதிரி சிந்திக்காமல் கொஞ்சம் மாற்றி யோசித்தால் விளைச்சலிலும், உற்பத்தியிலும் சமூக பொருளாதார வளர்ச்சியிலும் மிகுந்த முன்னேற்றம் அடையலாம். ஆகவே சிந்திக்கனும் என்ற விளக்கேற்றினால் உழவர் மன்றம் நன்றாக செயல்படும் என்பது நிச்சயம் என்று கூறினார்.
கூட்டத்தில் வீட்ஸ் பணியாளர்கள் சிபி, ரோஸ்லின், ஆனந்தி, பிஎல்எப் பொறுப்பாளர்கள் அதிசயமணி, சூரியபாய் கமலம் மற்றும் மகளீர் சுய உதவிக் குழுவினர்கள் கலந்து கொண்டனர். இறுதியில் வீட்ஸ் பணியாளர் சாந்தி நன்றி கூறினார்.

**தரமற்ற விதை விற்பனை: துணை இயக்குனர் எச்சரிக்கை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 31,2012,06:34 IST

கருத்தை பதிவு செய்ய
ஈரோடு: "தரமற்ற விதைகளை விதை விற்பனையாளர்கள் விற்கக்கூடாது' என்று ஈரோடு மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குனர் அண்ணாதுரை எச்சரித்துள்ளார்.
அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:ஈரோடு மாவட்ட விவசாயிகள் நெல், மக்காச்சோளம், பருத்தி மற்றும் எண்ணெய் வித்து பயிர்களை அதிகளவில் பயிரிடுகின்றனர்.விவசாயிகள் தங்களுக்கு தேவையான விதைகளை உரிமம் பெற்ற விதை விற்பனை நிலையங்களில் மட்டுமே வாங்க வேண்டும். விதைகளை வாங்கும் போது சான்று அட்டை மற்றும் விபர அட்டையில் பயிர் ரகம், குவியல் எண், காலாவதி நாள், உற்பத்தியாளர் முகவரி ஆகிய விபரங்களை சரி பார்த்து வாங்க வேண்டும்.
வாங்கும் விதைகளுக்கு ரசீது கேட்டு பெற வேண்டும். விவசாயிகளின் நலன் காக்க ஈரோடு மாவட்டத்தில் விதை ஆய்வு துணை இயக்குனர் மற்றும் விதை ஆய்வாளர்கள் விதை விற்பனை நிலையங்களை ஆய்வு செய்வதுடன், விற்பனைக்காக இருப்பில் வைக்கப்பட்டு இருக்கும் விதை குவியல்களிலிருந்து முளைப்பு திறன், புறத்தூய்மை மற்றும் இனத்தூய்மை தரங்களை உறுதி செய்ய விதை மாதிரிகளை எடுத்து வருகின்றனர்.விதை பரிசோதனை முடிவில் தரமற்ற விதை என தெரியவந்தால், விதை உற்பத்தியாளர், விநியோகஸ்தர் மற்றும் விற்பனையாளர் ஆகியோர் மீது நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.விதைச்சட்டத்தை மீறும் விதை விற்பனையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

## தேயிலை விவசாய உறுப்பினர்களுக்கு வாகன கடன் :வாரியம் ரூ.1.5 கோடி நிதி ஒதுக்கீடு

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 30,2012,22:48 IST

கருத்தை பதிவு செய்ய

மஞ்சூர் : "கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் உள்ள ஆதிதிராவிடர் உறுப்பினர்களுக்கு 50 சதவீத மானியத்தில் வாகன கடன் வழங்க
1.5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது,' என ஆலோசனை கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேயிலை வாரியத்தின் சார்பில், ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்த சிறு தேயிலை விவசாயிகளின் பொருளாதார மேம்பாட்டிற்காக சிறப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 1.5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தில் செயல்பட்டு வரும் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளை சேர்ந்த ஆதிதிராவிடர் தேயிலை விவசாய உறுப்பினர்களுக்கு இந்த சிறப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

சலுகைகள் குறித்து தேயிலை வாரியத்தின் சார்பில் ஆலோசனை கூட்டங்கள் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் நடத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக மஞ்சூர் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில் ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்த தேயிலை விவசாய உறுப்பினர்களின் கூட்டம், தனி அலுவலர் அருணாச்சலம் தலைமையில் நடந்தது. கூட்டத்தில், ஆதிதிராவிடராக உள்ள தேயிலை விவசாய உறுப்பினர்களுக்கு தேயிலை வாரியத்தின் சிறப்பு திட்டத்தின் கீழ் விவசாய பயன்பாட்டிற்காக 50 சதவீத மானியத்தில் வாகன கடன் வழங்கப்படும்.

பற்றாக்குறைக்கு நவீன இயந்திரம்: ஆட்கள் பற்றாக்குறையை தவிர்க்கும் பொருட்டு தேயிலை தோட்டங்களில் தேயிலை பறிப்பதற்காக நவீன தேயிலை பறிக்கும் இயந்திரம், கவாத்து இயந்திரம் ஆகியவை இலவசமாக வழங்கப்படும். தேயிலை மறு நடவு, கவாத்து உள்ளிட்ட பணிகளுக்கு சலுகைகள் வழங்கப்படும்.

ஆதிதிராவிடர் சிறு தேயிலை விவசாயிகள் வசிக்கும் கிராமங்களில் தேயிலை கொள்முதல் மையம், உரக்கிடங்குகள் அமைத்து தரப்படும். தேயிலை வாரியத்தின் இந்த சலுகைகளை பெற கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் உறுப்பினர்களாக உள்ள ஆதிதிராவிடர் விவசாயிகள் நவீன இயந்திரங்களை வாங்கி பயனடையலாம்.

கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் உறுப்பினர்களாக உள்ள ஆதிதிராவிடர் விவசாயிகள் குழுக்களை அமைத்து தங்களது நில உரிமை சான்று, அனுபோக சான்று, ஜாதி சான்றிதழை கொடுத்து பயன் பெறலாம்.

---

தினகரன்

# திட்டம் அறிவித்தும் வேளாண் கருவிகளுக்கு மானியம் இல்லை விவசாயிகள் அவதி

பதிவு செய்த நேரம்:2012-08-30 10:13:29

திருத்துறைப்பூண்டி, : கடந்தாண்டு உரிய நேரத்தில் மேட்டூர் அணை திறந்ததால், திருவாரூர் மாவட் டம் திருத்துறைப்பூண்டி தாலுகா பகுதியில் குறுவை, சம்பா, தாளடி என 3 சாகுபடியிலும் அதிக மகசூல் கிடைத்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். இந் தாண்டு கோடை மழையும் இல்லாமல் வாய்க்கால், ஆறு, குளங்களில் தண்ணீர் வற்றிப்போய்விட்டது. மக்களின் அன்றாட பயன்பாட்டிற்கு கூட தண்ணீர் இல்லை. குடிநீர் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது. இதனால் இந்தாண்டு குறுவை சாகுபடி இல்லை. சம்பா சாகுபடிக்கும் உரிய நேரத்தில் தண்ணீர் திறக்கப்படவில்லை. இதனால் ஒரு போக சாகுபடி செய்யலாமா என விவசாயிகள் குழப்பத்தில் உள்ளனர்.

இந்நிலையில் மேட்டூர் அணையில் இருந்து வரும் செப்டம்பர் 17ம் தேதி தண்ணீர் திறப்பதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. திருத்துறைப்பூண்டி தாலுகா பகுதியில் விவசாயிகள் தங்களது வயல்களில் நேரடி விதைப்பு பணிகளை துவக்கியுள்ளனர். இதற்காக நிலத் தில் டிராக்டர்கள் மூலம் உழவு பணியை செய்துள்ளனர்.

மழையை நம்பி சில இடங்களில் விவசாயிகள் குறைவான ஏக்கரில் நேரடி நெல் விதைப்பு செய்துள்ளனர். ஆனால் திருத்துறைப்பூண்டி அடுத்த கீராலத்தூர் ஊராட்சியில் 600 ஏக்கரில் நேரடி நெல் விதைப்புக்கு நிலத்தை டிராக்டர் வைத்து உழுது வருகின்றனர்.

இதுகுறித்து விவசாயி கனகசுப்பிரமணியன் கூறுகையில், ‘கீராலத்தூர் ஊராட்சியில் மொத்தமுள்ள 600 ஏக்கரில் நேரடி நெல் விதைப்பு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இதுவரை 145 ஏக்கரில் நேரடி விதைப்பு செய்யப்பட்டுவிட்டது. நேரடி விதைப்புக்கு முன்பு வயல்களை உழுதுவிட வேண்டும். பின்னர் நிலத்தை சமன்படுத்த வேண்டும். வேளாண் துறை சார்பில், நேரடி நெல் விதைப்பு கிராமமாக தேர்வு செய்யப்பட்டு டிராக்டர்களை வாடகைக்கு அனுப்பியுள்ளனர். உழுத வயலை லேசர் லெவலர் கருவி மூலம் சமன்படுத்தி கொடுத்து வருகின்றனர். இதற்காக ஒரு ஏக்கருக்கு ரூ.300 வாடகை வாங்கி கொள்கிறார்கள். முதல்வர் விவசாய கருவிகள் பெறுவதற்கு மானியம் அறிவித்துள்ளார்கள். அதன்படி லேசர் கருவி பயன்படுத்துவதற்கு வாடகை ரூ.300ல் ரூ.150 மானியம் வழங்க வேண்டும். எங்கள் கிராமத்தில்

அனை த்து விவசாயிகளும் நெல் நேரடி விதைப்பு செய்து வருகின்றனர். மழை பெய்யும் வரை, மேட்டூர் அணையில் திறக்கும் தண்ணீர் வரும் வரை நெல் விதைப்பு செய்த வயல்களில் விதை வீணாகாது என்று தெரிவித்தார்.

அரசாணை வரவில்லை

இதுகுறித்து வேளாண் அதிகாரி கூறுகையில், 'வேளாண் கருவிகளுக்கு தமிழக அரசு மானியம் அறிவித்துள்ளது. ஆனால் எந்த கருவிக்கு எவ்வளவு மானியம் என்ற அரசாணை இன்னும் வரவில்லை. அரசாணை வந்த பின்னரே மானிய விவரம் குறித்து விவசாயிகளுக்கு தெரியப்படுத்தப்படும்' என்றார்.

## குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் புகார் போதிய விதை நெல், உரம் கிடைப்பதில்லை

பதிவு செய்த நேரம்:2012-08-30 11:55:45

திருவள்ளூர், : திருவள்ளூர் கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடந்தது. கலெக்டர் ஆசிஷ் சட்டர்ஜி தலைமை வகித்தார். டிஆர்ஓ விசாகன், வேளாண் இணை இயக்குனர் சீனிவாசன், கோட்டாட்சியர் கலைவாணி மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர். கூட்டத்தில் விவசாயிகள் பலர் கலந்துகொண்டனர்.

விவசாயிகள் சங்கத்தை சேர்ந்த ஆறுமுகம் கூறுகையில், பருவ மழை பொய்த்துள்ள நிலையில் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. அனைத்து ஒன்றியங்களிலும் விவசாயிகளுக்கு போதிய விதை நெல், உரம் தரப்படவில்லை. வேளாண் இடுபொருட்களை முறையாக தருவதில்லை. 10 மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்படுகிறது என்றார்.

பா.ஜ. விவசாய அணி தலைவர் பாஸ்கரன் பேசியதாவது:

பெரிய தாலுகாவான பொன்னேரியை இரண்டாக பிரித்து, சோழவரத்தை தலைமையிடமாக கொண்டு புதிய தாலுகா உருவாக்கவேண்டும். சோழவரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் 3000 மாணவ, மாணவிகள் படிக்கின்றனர். ஆனால் பள்ளி பஸ் நிறுத்தத்தில் அரசு, மாநகர பஸ் சரிவர நிற்பதில்லை. இதனால் காரனோடை அல்லது சோழவரம் பஸ் நிலையத்துக்கு செல்ல வேண்டி உள்ளது. இதுகுறித்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தேவம்பட்டு பகுதியில் இறால் பண்ணைகளால் நிலத்தடி நீர் பாதிக்கப்படுகிறது. ஆமூர் பெரிய ஏரி ஆக்கிரமிப்பை அகற்றி தூர்வார வேண்டும். பல்வேறு இடங்களில் நீர்வரத்து கால்வாய்கள் காணாமல் போய்விட்டன. பொதுப்பணித்துறை இதை கண்டுகொள்ளவில்லை.

பழுதடைந்துள்ள பொன்னேரி தாலுகா அலுவலகத்துக்கு புதிய கட்டிடம் கட்டவேண்டும். கிளாம்பாக்கத்தில் குடிநீர் பிரச்னையை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ராஜபாளையம் ஏரியில் மதகை சீரமைக்க வேண்டும். திருவூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் நகைக்கடன் வழங்குவதில் முறைகேடு நடந்துள்ளது. செவ்வாபேட்டையில் இருந்து பூந்தமல்லிக்கு மாநகர பஸ் இயக்கவேண்டும்.

நடைமுறைக்கு சாத்தியமில்லை நாற்றங்கால் அமைக்க விவசாயிகள் மறுப்பு

பதிவு செய்த நேரம்:2012-08-30 11:38:57

காட்டுமன்னார்கோவில், : தமிழக அரசு அறிவித்துள்ள சமுதாய நாற்றங்கால் அமைக்க கடலூர் மாவட்ட விவசாயிகள் ஏற்காததால் விளை நிலம் கிடைக்காமல் வேளாண் அலுவலர்கள் திண்டாடி வருகின்றனர்.

காட்டுமன்னார் கோவிலில் பெரும் பாலானோர் விவசாயிகள் வசித்து வருகின்றனர். இங்கு வடவாறு, வடக்கு ராஜன்வாய்க்கால், வீராணம் ஏரி ஆகியவற்றின் மூலம் பாசனம் பெற்று சுமார் ஒரு லட்சம் ஏக்கர் விளை நிலங்கள் பயிரிடப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் மேட்டூர் அணை திறக்கப்பட்டு ஜூலை மாதம் தண்ணீர் வரப்பெற்று சம்பா சாகுபடி செய்வர். இந்த ஆண்டு மேட்டூர் அணையில் போதிய அளவு தண்ணீர் இல்லாததனாலும், பருவ மழை பொய்த்ததாலும் விவசாயிகள் குறுவை சாகுபடியை முற்றிலும் செய்யவில்லை. சம்பா சாகுபடிக்காவது தண்ணீர் வருமா என்ற கவலையில் உள்ளனர்.

இந்நிலையில் தமிழக அரசு வரும் செப்டம்பர் 17ம் தேதி மேட்டூர் அணை திறக்கப்படும் என அறிவித்துள்ளது. மேலும் விவசாயிகள் நாற்று விடுவதற்கு ஏதுவாக பல்வேறு சலுகைகளை அறிவித்துள்ளது. இதன்படி விரைவில் நடவு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் அரசு சமுதாய நாற்றங்கால் என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு ஹெக்டேர் பரப்பில் விவசாயி நாற்று விட்டு நடவு சமயத்தில் அப்பகுதியில் உள்ள விவசாயிகள் இலவசமாக நாற்றை பறித்து எடுத்துச் சென்று தங்கள் வயல்களில் நடவு செய்து கொள்ளலாம் என்று அறிவித்தது. மேலும் இத்திட்டத்தில் ஒரு ஹெக்டர் நிலப்பரப்பு அளித்த விவசாயிக்கு ரூ.47 ஆயிரம் உதவி தொகை அளிக்கப்படும் என அறிவித்தது. இதனை கருத்தில் கொண்டு வேளாண்மை துறை அலுவலர்கள் சமுதாய நாற்றங்கால் அமைப்பதற்கான விவசாயிகளை தேடி வருகின்றனர். ஆனால் விவசாயிகள் இதில் ஆர்வம் குறைந்து யாருமே சமுதாய நாற்றங்கால் திட்டத்திற்கு முன் வரவில்லை. இதனால் வேளாண்மை அலுவலர்கள் அரசின் திட்டத்தை செயல்படுத்த முடியாமல் சிரமப்பட்டு வருகின்றனர்.

இதுபற்றி விவசாய சங்க தலைவர் இளங்கீரனிடம் கேட்ட போது சமுதாய நாற்றங்கால் என்பது நடைமுறைக்கு சாத்தியப்படாது. ஒரு விவசாயி நிலத்தில் நாற்றங்கால் அமைத்து அதில் விதை விட்டு குறிப்பிட்ட நாளில் பறிக்க வேண்டும்.

இல்லையேல் நாற்று முதிர்ந்து விடும். ஒரே நேரத்தில் அனைவரும் நாற்றங்காலில் நாற்று பறிப்பது என்பது இயலாத காரியம். மேலும் நாற்று பறித்து நடவு செய்வதற்கு ஆட்கள் பற்றாக்குறை கண்டிப்பாக ஏற்படும். இதனால் அதிக ஊதியம் கொடுத்து நாற்று பறிக்க வேண்டிய நிலை ஏற்படும். மேலும் குறிப்பிட்ட நாள் தாண்டிய பிறகு நாற்று பறிக்கவில்லையெனில் நிலம் கொடுத்த விவசாயிக்கு சிரமம் ஏற்படும். அவரால் குறிப்பிட்ட நாளில் அவருடைய வயலில் நடவு

பணி செய்ய இயலாது. மேலும், நாற்றங்கால் அமைக்கும் வயல்களில் விளைச்சல் குறைந்து காணப்படும். இவ்வாறு பல விதத்திலும் சமுதாய நாற்றங்காலால் விவசாயிகளுக்கு இடர்பாடுகள் ஏற்படும் என்றார்.
சமுதாய நாற்றங்கால் செய்ய விவசாயிகள் மறுப்பு செய்து வருவதால் கடலூர் மாவட்டத்தில் வேளாண் அலுவலர்கள் திண்டாடி வருகின்றனர்.

விவசாயிகளுக்கு இலவச விதை வழங்க கோரிக்கை

பதிவு செய்த நேரம்:2012-08-30 11:38:46

புவனகிரி, : பரங்கிப்பேட்டை வட்டார, நகர காங்கிரஸ் கமிட்டி ஆலோசனை கூட்டம் நடந்தது. மாவட்ட பொதுச்செயலாளர் ஜெகநாதன் தலைமை தாங்கினார். பரங்கிப்பேட்டை வட்டார இளைஞர் காங்கிரஸ் தலைவர் இளையபெருமாள், கவுன்சிலர் அம்சவேணி முருகையன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகர தலைவர் அப்துல் லத்தீப் வரவேற்றார்.
வருகிற 1ம் தேதி கடலூரில் நடக்க உள்ள சிலை திறப்பு விழா மற்றும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ள பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் இருந்து மாவட்ட தலைவர் நெடுஞ்செழியன், தொழிலதிபர் மணிரத்தினம் ஆகியோரது தலைமையில் 100க்கும் மேற்பட்ட வாகனங்களில் செல்வது.
சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் தாலுகாக்களில் வறட்சியால் விவசாயிகள் வாடுகின்றனர். இப்பகுதிகளில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் குறுகிய சாகுபடி விதை நெல்லை இலவசமாக வழங்க வேண்டும். மானிய விலையில் உரங்களையும் வழங்க வேண்டும். மத்திய அரசால் கொண்டு வரப்பட்ட மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் அனைவருக்கும் அடையாள அட்டை வழங்க வேண்டும். இந்த திட்ட பணிகளுக்கு ஊராட்சி அலுவலர்கள் உதவியாக இருக்க மாவட்ட ஆட்சியர் உத்தரவிட வேண்டும் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.
இக்கூட்டத்தில், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் தமிழரசன், நிர்வாகிகள் கந்தசாமி, தியாகராஜன், ராமையன், கோவிந்தசாமி, நடராஜன், திருஞானம், முருகேசன், பிரபாகரன் உட்பட பலர் கலந்துகொண்டனர். கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார்.

மான்ய விலையில் பசுந்தாள் உர விதைகள்

பதிவு செய்த நேரம்:2012-08-30 10:18:47

நாமகிரிப்பேட்டை, : நாமகிரிப்பேட்டை வட்டார வேளாண் அலுவலகத்தில் மான்யத்தில் பசுந்தாள் உர விதைகள் விநியோகம் செய்யப்படுகிறது.
இதுகுறித்து நாமகிரிப்பேட்டை வட்டார வேளாண் உதவி இயக்குனர் லோகநாத பிரகாசம்

வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது:
நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், பசுந்தாள் உர விதைகள் மான்யத்தில் வழங்கப்படுகிறது. மண் வளத்தை அதிகரிக்க பசுந்தாள் உரம் விதைத்து, பூக்கும் தருணத்தில் மடக்கி உழுவது மிகவும் இன்றியமையாதது. பசுந்தாள் உரம் தழை சத்தை மண்ணில் நிலை நிறுத்தும் தன்மை கொண்டது. மேலும், மணிச்சத்து, சாம்பல் சத்துகளையும் தரக்கூடியது. பசுந்தாள் உரமான தக்கை பூண்டை களர், உவர் நிலங்களில் பயிரிடுவதால் மண்ணில் களர் தன்மை குறைந்து  தரம் உயர்கிறது.
பல பருவங்களுக்கு இடையில் ஒரு பருவத்தில் தக்கை பூண்டினை பயிரிடுவதால் அதை தொடர்ந்து வரும் பயிர்களுக்கும் தழைச்சத்து மற்றும் பிற சத்துக்கள் கிடைக்கிறது. பயிரின் வளர்ச்சியும் அதிகரிக்கிறது. மேலும், பசுந்தாள் உரம் அதிகளவு நார்சத்து கொண்டுள்ளதால் மண்ணின் தரத்தை சீராக வைக்க உதவுகிறது. நடப்பாண்டில் நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில் 60 விவசாயிகளுக்கு தக்கைபூண்டு விதைகள் மான்யத்தில் வழங்கப்பட உள்ளது.
கூடுதல் விபரம் தேவைப்படுவோர் வட்டார வேளாண் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு வேளாண் உதவி இயக்குனர் லோகநாதபிரகாசம் தெரிவித்துள்ளார்.

## விதைசான்று நடைமுறை பயிற்சி

பதிவு செய்த நேரம்:2012-08-30 10:40:13

ஜெயங்கொண்டம், :ஜெயங்கொண்டம் வேளாண்மை வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகளுக்கு விதை சான்றளிப்பு மற்றும் அங்கக சான்றளிப்பு துறை சார்பில் அட்மா திட்டத்தின்கீழ் விதைசான்று நடைமுறை பயிற்சி வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடந்தது.
மத்திய திட்ட மாவட்ட வேளாண் துணை இயக்குனர்(பொ) இளங்கோவன் பேசியதாவது: பசுமை புரட்சிக்கு சான்று விதைகளை பயன்படுத்த வேண்டும். சான்று விதைகளை உற்பத்தி செய்வதால் கூடுதல் வரு மானம் கிடைக்கும் என்றார்.
விதை பண்ணை பதிவு குறித்து பெரம்பலூர் விதைசான்று உதவி இயக்குனர் முரளீதரன், பண்ணை அமைக்கும்போது கவனிக்க வேண்டியது குறித்து பெரம்பலூர் விதைசான்று அலுவலர் பழனிசாமி, சான்று பணி குறித்து அரியலூர் விதைசான்று அலுவலர் காசிநாதன் விளக்கம் அளித்தனர். அலு வலர் காசிநாதன் நன்றி கூறினார்.

---